**30.10.2019.அ.வ.எண்.63/2007**

**வா.சா.2, அன்பழகன்**

பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

வா.சா.ஆ.8 எடுக்கப்பட்ட புகைப்படமானது சம்பவத்தன்று எடுக்கப்பட்டது என்பதை நிருபிக்க ரசீது ஏதேனும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5ஆன குடும்ப அட்டையில் என் அம்மாவின் பெயரை தவிர வாரிசுகளாகிய எங்களின் பெயரில் எதுவும் இல்லை என்றால் சரிதான். அவருடைய வாரிசு தான் என்பதற்கு ஏதேனும் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். லோகநாதன் என்பவர் என்னுடைய அப்பா என்தற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.4 ஆவணத்தில் நாங்கள் 800 சதுர மீட்டர் அல்லது 47 செண்டில் அனுபவத்தில் உள்ளோம் என்பதனை காட்டும்படியான வாசகம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 ஆவணத்திலும் அது மாதிரியான வாசகம் எதுவும் இல்லை என்றால் இல்லை. சாட்சி தாமாக முன் வந்து சொத்து வரி தாங்கள் செலுத்தி வருவதாக கூறியுள்ளார். வா.சா.ஆ.2ல் 800 சதுர மீட்டர் மட்டும் தான் அனுபவத்தில் உள்ளோம் என்ற வாசகம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2-ல் 800 சதுர மீட்டரானது எனக்கு பட்டா அளித்த மூன்று செண்டுக்கு உள்ளடங்கியது தான் என்றால் தவறு. ஆனால் அந்த அளிக்கப்பட்ட 3 செண்டு பட்டாவானது 800 சதுர மீட்டரில் உள்ளடக்கியது என்று இந்த தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் வரி ரசீது எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்து வரியில் 47 செண்டு ஏதேனும் குறியிடப்பட்டுள்ளதா என்றால் சொத்து வரி கட்டியுள்ளோம். அந்த தாவா சொத்தானது 39 செண்டுதான். எங்கள் அனுபவமானது 800 சதுர மீட்டருக்கு மட்டுமே உரித்தானது என்றால் தவறு. நாங்கள் 47 செண்டின் அனுபவத்தில் உள்ளோம் என்பதற்காக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு பட்டா எதுவும் அளிக்கப்பட்டுள்ளதா என்றால் அளிக்கப்பட்டுள்ளது. அது போலி பட்டா என்று சாட்சி தாமாக முன் வந்து சொல்லியுள்ளார். பிரதிவாதி அந்த இடத்தை வேறு ஒருவருக்கு விற்றுவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த இடத்தை வாங்கியுள்ள நபர் என் மீதும் என்னுடைய அம்மாவின் மீதும் இந்த் நீதிமன்றத்தில் அ.வ.எண்.482/2016 என்ற வழக்கை

தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கை நானும் என்னுடைய அம்மாவும் ஆஜராகி வழக்கறிஞர் மூலம் பதில் மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அவ்வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தை வாங்கிய நபரை இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்க்க நான் எந்த வித மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் அந்த சொத்தை வேறு ஒரு நபருக்கு விற்றுவிட்டதால் எங்களுக்கு உறுத்துக்கட்டளை நிவாணரம் பெற தகுதியில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

<u>2ம் வாதியின் தரப்பில் மறு விசாரணை</u>

வா.சா.ஆ.8க்கான ரசீது இதுதானா என்றால் சரிதான். 47 செண்டிற்கும் பட்டா அளித்துள்ளார்கள். அதை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

(வாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மறு விசாரணைக்கு தொடர்ச்சிக்காக வேண்டி ஒத்தி வைக்கப்படுகிறது)